# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 562/2016

ஆணை எண். 085/2017

நாள் : 03/05/2017

திரு. க. கரிகாலன்,
சின்னப்பா முதலியார் தெரு,
கீழ் புவனகிரி, கடலூர் மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
மற்றும் செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
புவனகிரி, கடலூர் மாவட்டம். — எதிர் மனுதாரர்கள்

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் வசித்து வரும் திரு. க. கரிகாலன், என்பவரது 13–06–2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 14.06.2016 அன்று பெறப்பட்டு 562/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:–

## ஆணை

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் வசித்து வரும் திரு. க. கரிகாலன், அவர்களின் 13.06.2016 நாளிட்ட நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அனுப்பப்பட்ட முறையீட்டு மனுவில் முறையீட்டு மனுதாரர் புவனகிரி பேரூராட்சியில் உள்ள 6–வது வார்டில் சுமார் 6 ஏக்கர் பரப்பளவுள்ள தாமரை குளம் குத்தகை விடப்படாமல் உள்ளது என்றும், கடந்த ஆண்டு பெய்த மழை வெள்ளத்தில் வந்து இயற்கையாக விளைந்த மீன்கள் சுமார் மூன்று லட்சம் மதிப்பில் உள்ளது என்றும் இக்குளத்தில் தேர்தல் காலத்தில் எந்தவித உத்தரவும், டெண்டரும் கோரப்படாத நிலையில் குத்தகைக்கு விடாமல் அரசுக்கு சொந்தமான மீன்களைப் பிடித்து விற்று ரூபாய் ஒரு லட்சம் களவு செய்துள்ளனர் என்றும், கோடை காலங்களில் மக்கள் பயன்பாட்டிற்கும், ஆடுமாடுகள் தேவைக்கும் பயன்படும் தண்ணீரை விரயம் செய்துள்ளனர் என்றும் மேற்படி செயல்கள் சட்டவிரோதமானது என்றும் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இம்முறைமன்ற நடுவத்தின் அறிவிப்பாணை எண்.0562/2016/ பேரூராட்சி, நாள்.24.06.2016 வாயிலாக மனுதாரரின் முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது 06.07.2016, 01.08.2016 மற்றும் 05.12.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் பேரூராட்சிக்குட்பட்ட தாமரைக் குளத்தில் படித்துறை கட்டும் பணிக்காக 2013–14ஆம் ஆண்டு குளங்களை தூர்வாருவதற்கு பொது நிதியில் பணி மேற்கொள்ள 11.09.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், தாமரைக்குளத்தில் தொடர்ந்து நீர் குறையாமல் இருந்து வந்த காரணத்தால் பணி மேற்கொள்ள இயலாத நிலையே இருந்து வந்தது என்றும், இதனடிப்படையில் 2016-ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர் கோடைகாலமான மே, ஜூன் மாதங்களில் படித்துறை பணி செய்ய முற்படும் போது ஊர் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் இப்பேரூராட்சி மூலம் பணியினை மேற்கொள்வதை தடுத்து நிறுத்தப்பட்டு மேற்படி குளம் 2016–17ம் ஆண்டிற்கு மச்சமகசூல் (மீன்பிடி குத்தகை) அனுபவிக்கும் பாத்தியதையை 20.07.2016 அன்று காலை 11.30 மணிக்கு பகிரங்க பொது ஏலம் விடப்பட்டது என்றும் பொது ஏலத்தில் கலந்துக்கொண்ட நபர்களுள் உயர்ந்த பட்ச ஏலம் கோரிய திரு. எம். பழனி (எ) கணேசன் என்பவருக்கு ரூ.2,15,000/-க்கு ஏலம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், ஏலதாரர் செலுத்த வேண்டிய தொகையினை வங்கி வரைவோலை மூலமும், ரொக்கமாகவும் பேரூராட்சிக்கு ரூ.2,15,000/-ஐ செலுத்தி உள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், ஓராண்டிற்கான மீன்வளர்ப்பு மற்றும் மச்சமகசூல் அனுபவிக்கும் பாத்தியதைக்காக தாமரைக்குளத்தினை முறையாக பொது ஏலம் விடப்பட்டுள்ளதாகவும். இக்குளத்தில் பொது ஏலம் விடாமல் மீன்பிடிப்பதாகவும் குளத்தின் நீரை வீணடிப்பதாகவும் தவறான புகார் எழுப்பப்பட்டுள்ளது எனவும் செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணை அசல் மனு எண்.562/பேரூராட்சி நாள்:18.08.2016 வாயிலாக முறையீட்டு மனுதாரர் 19.09.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தில் அழைக்கப்பட்டார். மேற்படி விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர், புவனகிரி பேரூராட்சி தாமரைக் குளத்தில் 6வது வார்டு உறுப்பினர், திரு. கதிர் என்பவர் பேரூராட்சி உதவி இயக்குநர் ஜீஜாபாய் மற்றும் செயல் அலுவலர் திரு. சக்கரவர்த்தி இருவரின் துணையோடு, நிறைந்த குளத்தில் இன்ஜின் மூலம் நீர் இறைத்து ரூ.1 இலட்சம் பெறுமான மீனை பிடித்து விற்றுவிட்டார்கள் என்றும் இந்தக் குளத்து மீனை குத்தகைக்கு விட்டு இருந்தால் ரூ.1 இலட்சம் வரை புவனகிரி பேரூராட்சிக்கு லாபம் கிடைத்திருக்கும் என்றும், ஆனால் ஏலம் விடாமல் தண்ணீரை இறைத்து உதவி இயக்குநரும், நிர்வாக அலுவலரும் மீனை சட்டத்திற்கு புறம்பாக விற்று விட்டனர் என்றும் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்:-

> *19.09.2016 நடைபெற்ற விசாரணையின் போது புவனகிரியை சேர்ந்த திரு. மோகன் என்பவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். விசாரணையில் மேற்படி சாட்சியும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தையே வலியுறுத்தி கூறினார்.*

4. இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அ.ம.எண்.562/2016 நாள்:18/12/2016 மூலம் செயல் அலுவலர் விசாரணைக்கு 18.01.2017 அன்று அழைக்கப்பட்டார். 18.01.2017 அன்று நடைபெற்ற விசாரணையின் போது ந.க.எண்.அ1.401/2016–நீரிட்ட மற்றும் 12.01.2017 நாளிட்ட விளக்க அறிக்கையினையும் பின்வரும் வாக்குமூலத்தினையும் செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்:-

> *"மீனவர் சங்கத்திற்கு இந்த தாமரைகுளம் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட குளமானது 2016-ஆம் ஆண்டு மீண்டும் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. இதற்கான தனியாக எந்த ஆணையும் வழங்கப்படவில்லை. படித்துறை கட்டுவதற்காக இந்த தாமரைகுளம் மீண்டும் பேரூராட்சிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நாங்கள் பேரூராட்சிக்கு தாமரைகுளம் பொறுப்பில் எடுக்கும் பொழுது மீனவர் சங்கம் எந்த ஆட்சேபனையும் சொல்லவில்லை.*

2010-2011-ஆம் ஆண்டு ரூ.6000/- 2013-14-ஆம் ஆண்டு முடிய மீனவர் சங்கத்திடமிருந்து பேரூராட்சிக்கு உரிய தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் அடங்கிய அறிக்கையினை சமர்ப்பித்துள்ளேன். 2014-15 முதல் 3 ஆண்டுகளுக்கு 20.7.2016ல் ஏலம் விடப்பட்டது ரூ.2,15,000/- ஏலம் போனது என்றும் தெரிவித்துள்ளார்."

5. முறையீட்டு மனு, முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம், செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அதனுடன் பெறப்பட்ட சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், 13.6.2016 நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்ட பிறகே மேற்படி தாமரைக் குளத்தின் மீன்பிடி குத்தகை பொது ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பது அறியப்படுகிறது. மேலும், மீன்பிடி குத்தகை மூலம் ரூபாய் 2 இலட்சத்திற்கு மேல் வருமானம் அளிக்கும் குளத்தினை தென்னாற்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்திடமிருந்து பேரூராட்சியின் வசம் திரும்பப் பெறாமல் காலம் கடந்து 2016–17ல் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேலும் மீன்வளர்ப்போர் சங்கத்திடமிருந்து குறைவான தொகையே வசூல் செய்யப்பட்டுள்ளது. 2010–11 ஆண்டு முதல் 2014–15 ஆண்டு முடிய ஐந்தாண்டுகளுக்கு மீன்பிடி குத்தகை ரூ. 38,934/–க்கு ஆண்டுக் கணக்கில் கணக்கிடப்பட்டு மீன் வளர்ப்போர் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ஆண்டுகளுக்கு பிந்தைய ஆண்டுகளுக்கு (அதாவது 2015–16 முதல்) ரூ.2,15,000/–க்கு மீன் ஏலம் விடப்பட்டது. எனவே, தென்னாற்காடு மாவட்ட மீன்வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்திற்கு 2010–11 ஆண்டு முதல் 2014–15 ஆண்டு முடிய மீன் குத்தகை வழங்காமல் பொது ஏலத்திற்கு விடப்பட்டிருந்தால் கணிசமான வருவாய் பேரூராட்சிக்கு கிடைத்திருக்கும். எனவே, மீன்வளர்ப்போர் சங்கத்திற்கு தொடர்ந்து மீன்பிடி உரிமை வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட கணிசமான வருவாய் இழப்பை கருத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய செயல்களினால் பேரூராட்சிக்கு கணிசமான வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என கண்டறியப்படுவதினால் மேற்கூறிய இழப்பிற்கு பொறுப்பான செயல் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு.க.கரிகாலன்,
   சின்னப்பா முதலியார் தெரு,
   கீழ்புவனகிரி, கடலூர் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   புவனகிரி பேரூராட்சி,
   புவனகிரி, கடலூர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 600 108.